Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (31-1-66) இதழ் 852

விசுவாவசு தை 18 ஷவ்வால் பிறை 8 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு



போன் 585 PHONE 585

K. N. M.
மீறன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### 20 கோடி ஒப்பந்தம் ரத்து

பெரு, ஜன. 30

20 கோடி டாலர் செலவில் பிரிட்டன், மேற்குஜெர்மனி ஆகிய நாடுகளுடன் செய்துகொண்டிருந்த நீர்வீழ்ச்சி மின்சாரத்திட்ட ஒப்பந்தத்தை பெரு ரத்துச் செய்துவிட்டது. திட்டம் இப்போது இத்தாலிய கம்பெனி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது பாதிக்கப்பட்ட நாடுகள் நஷ்டஈட்டை எதிர்பார்க்கின்றன.

# வியட்நாமில் 4000 புது துருப்புகள் இறக்கம்

## "சமசமாஜக் கட்சியில் தமிழனுக்கு இடமில்லை"

### மேயர் நாகராசா அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

நாட்டின் தேசிய ஒற்றுமையைக் குலைக்கவும், இனமத வேறுபாடுகளை வளர்க்கவும், தொழிலாளர்கள், விவசாய மக்களின் சோசலிஸ முற்போக்கு இயக்கத்தை முறியடிக்கும் விதத்தில்டாக்டர்என். எம். பெரேரா தலைமையில் இயங்கும் லங்கா சமசமாஜக் கட்சி செயலாற்றுகின்றது. அதனால், மானமுள்ள எந்த ஒரு தமிழ் பேசும் மகனும் இக்கட்சியில் தொடர்ந்து அங்கம் வகிக்க முடியாத நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண நகரமேயர் திரு. சி. நாகராசா சமசமாஜக்கட்சியிலிருந்து தாம் விலகியதற்கான காரணம்பற்றி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது:

#### தலைமைப்பீடம் காரணம்

நீண்டகாலமாக அக்கட்சியுடன் தொடர்பு கொண்டும், கடந்த சில வருடங்களாக கட்சி நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்குபற்றியதற்கும் மூலகாரணம் லங்கா சமசமாஜக்கட்சியின் மூலமே இந்த நாட்டில் இனமத பேதமற்ற சமத்துவ சமரஸ சோஷலிஸ சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியுமென்ற எனது திடநம்பிக்கைதான். அந்த நம்பிக்கைதமிழ்பேசும்மக்களைப் பொறுத்தமட்டில் சிதைந்து போய்விட்டது. இனிமேலும் சமசமாஜக்கட்சியில் அங்கம் வகிப்பேனுகில் தமிழ்ப் பேசும் மக்களுக்குத் துரோகம் இழைத்தவனாகவும், மாறிவிடுவேன். சமசமாஜ கட்சியின் இன்றைய வகுப்புவாத பிற்போக்குக் கொள்கைகளை எந்தத் தமிழ் மகனும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, தமிழ்ப் பேசும் ஒருவன் தொடர்ந்தும் அக்கட்சியில் உறுப்பினராக இருப்பது சாத்தியம் இல்லை. இவ்வித நிலை ஏற்படுவதற்கு கட்சியின் தலைமைப்பீடமே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1961-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசும்பொழுது, தமிழ்ப் பேசும் மக்களின் கோரிக்கைகள் வெட்ட வெளிச்சமானவை. சிங்களமொழி அரசகரும மொழியாக கட்டாயமாக்கப்பட்டு விட்டது. சிங்களமொழி அரசகரும மொழியாக்கப்பட்டதை அவர்கள் எதிர்க்கவில்லை. அவர்கள் கேட்டுக்கொள்ளுவது யாதெனில், தமது மொழிக்கும் சட்டரீதியான அதே அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்பதே யாகும். அதை விடுத்து நாட்டைத் துண்டு போடுவது, பிரிப்பது போன்ற சிந்தனையையோ, கோரிக்கையையோ அவர்கள் முன் வைத்தது கிடையாது'' என்று கூறினர்.

#### அழிவுப் பாதை

இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்துக் கோரியும் சகல விடயங்களிலும் சமஅந்தஸ்தைஉறுதிசெய்தும் சமசமாஜக் கட்சி நடந்துகொண்டதால் சிறுபான்மை மக்கள் குறிப்பாக தமிழ்ப்பேசும்

(6-ம் பக்கம் பார்க்க)

### திருமண அழைப்பு

மணமகன்: திருவளர் செல்வன் துரையப்பா விஜயரத்தினம்

மணமகள்: திருவளர் செல்வி முத்துக்குமாரஸ்வாமி மகாலக்ஷ்மி

இடம்: மணகள் இல்லம் - காங்கேசன்துறை வீதி, மருதனுமடம் இணுவில் - சுன்னுகம்.

முகூர்த்தம்: 31-ம் திகதி திங்கள்
இரவு 9 மணி முதல் 10 மணிவரை.

125, அரசடி வீதி, கந்தர்மடத்திலிருந்து
இரவு 7 மணிக்கு மணமகன் புறப்படுவார்.

நண்பர்களையும் உறவினர்களையும்
அன்புடன் அழைக்கின்றேம்.

இங்ஙனம்,
திருமதி காவேரி துரையப்பா,

கந்தர்மடம். 1577

## பாப்பரசர் யோசனை பற்றி திரு. ஜோன்ஸன் பரிசீலனை

வாஷிங்டன், ஜன. 30

வியட்நாமில் சமாதானத்தை ஏற்படுத்த நடுநிலைமை நாடுகளின் கோஷ்டி ஒன்றை ஐ. நா. நியமிக்கவேண்டும் என்ற பாப்பரசர் பாலின் யோசனையை அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் பரிசீலித்துக்கொண்டிருக்கிருர்.

ஐ. நா. தலைமைக்காரியதரிசியுநாண்ட் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பாப்பரசரின் யோசனை மீது தாம் பெருமதிப்பு வைத்திருப்பதாகக்கூறினர். ஆனல் பாப்பரசர் அறிக்கையின் முழு விபரங்களையும் தாம் ஆராயுமுன், எவ்வித முடிவும் தெரிவிக்க முடியாது என அவர் மேலும் கூறினர்.

இதற்கிடையில் வட விட்நாம் அதிபர் டாக்டர் ஹோ-சி-மின் விடுத்துள்ள அறிக்கையில் ஏற்கனவே விதிக்கப்பட்டநிபந்தனைகளை தமது நாடு பற்றி நிற்கிறது எனக் கூறியிருக்கிருர்.

வெள்ளிக்கிழமைக்குப் பின் புதிதாக 4000 அமெரிக்கத்துருப்புக்களும், டாங்கிகளும் தென்வியட்நாமில் இறக்கப்பட்டன. ஆனல் இன்றுதான் இச்செய்தி அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் வியட்காங்கியரின் நிலைகளைத் தாக்கும் பொருட்டு அமெரிக்கக் கப்பல்கள் கரையோரமாகத் தயாராய் நிற்கின்றன.

அதிபர் ஜோன்ஸன் தமது பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா உட்பட, தமது உயர்தர ஆலோசகர்கள் பலருடன் வியட்நாம் பற்றி விவாதித்தார்.

### இலங்கை விஞ்ஞானி ஜோங்க்ளாஸ்

ரத்னகிரி, ஜன, 30

இலங்கையைச்சேர்ந்த நீர்மூழ்கியும், விஞ்ஞானியுமான திரு. ரொட்னி ஜொங்க்ளாஸ், ரத்னகிரிக்கருகே இதுவரை கண்டு பிடிக்கப்படாத மீன் ரகங்கள் காணப்படுவதாக நிருபர்களிடம் இங்கு கூறினர்.

கடந்த 26-ந் திகதி இங்குவந்த திரு. ஜொங்க்ளாஸ், வெளிநாடுகளில் மிகவும் கிராக்கியுள்ள கிளிமீன்கள் உட்பட பல வகையான வர்ண மீன்கள் இங்கு காணப்படுவதாயும், இவற்றின் 'மாதிரி'களை தாம் சேகரித்திருப்பதாயும் கூறினர்.

## இந்தியா எங்கும் தியாகிகள் தின அனுஷ்டானம்

புதுடில்லி, ஜன;30

காந்திஜீ அமரரான 18வது ஆண்டுதினம்இன்றுநாடெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

காந்திஜி உட்பட விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிரை அர்ப்பணித்த எண்ணற்ற தியாகிகளுக்கு இன்று பகல் 11 மணிக்கு அஞ்சலிசெலுத்தப்பட்டது, ஆலைகள், பட்டறைகள், வேலைஸ்தலங்கள், கப்பல்கள் ரயில்கள், விமானங்கள் ஆகியன குறித்த நேரத்தில் 2 நிமிடம் நிறுத்திவைக்கப் பட்டன.

ஜனதிபதி ராதா கிருஷ்ணன் ராஜ்காட்டிலுள்ள காந்தி சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தார்.

## தாயைக் காணது தவித்த பச்சிளம் குழந்தைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

பெற்றோரைக் காணது அழுது புலம்பிய பச்சிளம் குழந்தைகள் மூவர் தாய் பாசத்தினல் உந்தப்பட்டு அழுத கண்ணீரும் சிந்தி மூக்குமாக தங்களது வீட்டிலிருந்து கிளிநொச்சிக்குப் போகப் புறப்பட்டு சின்ன அடியெடுத்து வைத்து சில யார் தூரத்துக்கேனும் நடந்து செல்லு முன்னர் திசைமாறி திக்குமுக்காடி ''ஐயோ அம்மா'' என்று அழுது கண்ணீர் வடித்த பரிதாப சம்பவம் நேற்று பகல் கொழும்புத்துறையில் நிகழ்ந்தது

குழந்தைகளின் பரிதாப நிலையை கண்ணுற்ற ஒருவர் இக்குழந்தைகளை ஆதரவாக தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று பின்னர் பொலிசாருக்கு முறைப்பாடு செய்ததாகச் சொல்லப்படுகிறது கொழும்புத்துறையிலுள்ள யோகர் சுவாமி மடத்துக்கு அண்மையில் இக்குழந்தைகள் காணப்பட்டனர்.

மூத்தகுழந்தையின்பெயர் யோகநாதன் (5 வயது), இரண்டாவது குழந்தையின் பெயர் குணம் (31/2 வயது) மூன்ருவது குழந்தைக்கு இரண்டு வயது எனத்தெரியவருகிறது.

இச்சோக சம்பவம்பற்றி குழந்தை யோகநாதனிடம் விசாரித்தபொழுது, தமது பெற்றோர் கரையூரைச்சேர்ந்தவர்களென்றும் தகப்பன் லொறிச்சாரதி என்றும் தாயும் தந்தையும் தங்களை தனியே விட்டுச்சென்றுவிட்டனர் என்றும் கூறினர்.

'அம்மா கிளிநொச்சியில் இருப்பா, அவவைத்தேடி நாங்கள் நடந்து போகின்றேம்' என்றும் குழந்தை யோகநாதன் அழுதழுது கொண்டே சொன்னன்.

இக்குழந்தைகள் தத்தளித்த நிலையில் வீட்டைவிட்டு புறப்பட்டுச் சென்றபொழுது; குணம் என்ற குழந்தை மீது ஒரு சைக்கிள் மோதியதென்றும் சிறுகாயம் ஏற்பட்டதென்றும் கூறப்பட்டது.

இக்குழந்தைகளின் பெற்றோரைக் கண்டுபிடிப்பதில் முயற்கிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது

### சங்கானை பட்டின சபை உபதலைவர்

சுழிபுரம், ஞாயிறு

சங்கானைப் பட்டின சபை மாதாந்தக்கூட்டம் பட்டின சபைத்தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது பட்டின சபையின் நடப்பு வருட உபதலைவராக. திரு. ரி இராசையா போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறரது குற்றங்குறைகளைக் காண்பதில் நான் மிகமெதுவாகத்தானிருக்கிறேன். ஏனெனில் என்னிடம் அதிக குற்றங்கள் உள்ளன. மற்றவர்களது தயாளம் எனக்குத் தேவைப்படுகிறது. ஆகவே எவரது குற்றங்களையும் கடுமையாகக் கண்டிக்கப்படாதென்றும் அக்குற்றங்களுக்கான காரணம் உண்டு என்றும் தெரிந்துகொண்டிருக்கிறேன்.

—மகாத்மாகாந்தி

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 329

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு தை மீ 18 உ (31-1-66)

## யாழ்ப்பாண மாநகரசபை

'எந்த மேயருக்கும் எதிர்க்கோஷ்டி யொன்று இருக்கத்தான் வேண்டும். ஆனால் அந்த எதிர்க்கோஷ்டி, பொதுமக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய காரியங்களில் மேயருடன் பூரணமாக ஒத்துழைக்கவேண்டும். துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாண மாநகரசபையில் இந்த நிலைஇல்லை' என்று யாழ்ப்பாணநகரின்மேயர் திரு. நாகராசா, தமக்கும் மாநகரசபை உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் வேதனையோடு தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் இரண்டாவது பெரிய பட்டணமாக விளங்கும் யாழ்ப்பாண நகரம், தமிழ் மக்களின் தலைநகரமாகவும் கருதப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாண நகரின் நிலையையிட்டு இலங்கை மக்களோ, தமிழ் மக்களோ பெருமைப்பட முடியாது. யாழ்ப்பாண மாநகரசபையில் கோஷ்டிப் பூசல்களும் பிரிவினையும் இருப்பதும் மேயர் பதவி ஏற்றம் இறக்கம் நடைபெறுவதும் யாழ்ப்பாண நகரம் சீர்கெட்டிருப்பதற்கு காரணமென்பது பகிரங்க இரகசியம். நகர மக்களுக்கு வசதியளிக்கும் எந்த நல்ல காரியத்தையும் செய்யமுடியாமல் இந்தக்கோஷ்டிமனப்பான்மை தடுத்து வந்திருக்கிறது. மாநகரசபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்து அனுப்பும் பொதுமக்களும் நன்கு அறிந்தவிஷயமிது யாழ்ப்பாண மாநகரசபையில் மட்டுமல்ல, இலங்கையிலும் வெளிநாடுகள் பலவற்றிலும்கூட ஸ்தலஸ்தாபன சபைகளில் கோஷ்டிகளும் கட்சிகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவைகளில்உள்ள எதிர்க்கோஷ்டிகளும், கட்சிகளும் நகரினதும், நாட்டினதும் நலன் கருதி பல விஷயங்களிலும் ஒத்துழைப்பு அளிக்கின்றன.

யாழ்ப்பாண நகரைப் பொறுத்தவரையில் இன்று இரண்டு விஷயங்கள் பொதுமக்களுக்கு வசதியீனங்களையும் வீண் கஷ்டங்களையும் அளித்து வருகின்றன. ஒன்று பஸ் நிலையம்; மற்றது சந்தை.

இந்த இரு விஷயங்களும் தீராத பிரச்னையாக இருந்து வருகின்றன. இப்பொழுதுள்ள பஸ் நிலையமும், சந்தையும் பிரயாணிகளுக்கும் பொதுமக்களுக்கும் வசதிக்குறைவையும் வீண் கஷ்டங்களையும் ஏற்படுத்துகின்றனவென்பதை அனைவரும் அறிவர். இவற்றை நீக்கி, பொருத்தமானஇடத்தில் சகல வசதிகளுடனும் புதிய பஸ்நிலையம் ஒன்றையும் நவீனமுறையில் சந்தையையும் அமைக்க ஏன் இவ்வளவு தர்க்கமும் தாமதமும்?

பொதுமக்களின் நலனைக் கவனிப்பதற்காகவே மாநகரசபைக்கு அங்கத்தவர்கள் தெரிவுசெய்து அனுப்பப்பட்டுள்ளனர். ஒருவர்மீது ஒருவர் குறை கூறிக்கொண்டும், எந்தக் காரியத்துக்கும் தடை போட்டுக்கொண்டும் இருப்பதற்காக அல்ல!

பஸ்நிலையத்தை மீண்டும் பழைய இடத்துக்கே கொண்டுசெல்ல தாம் திட்டமிட்டிருப்பதாக மேயர் கூறுகிறார். இப்பொழுதுள்ள இடத்தை விடஅது வசதியாக இருக்கக் கூடுமென்றாலும் பிரயாணிகளின் பிரச்னை அனைத்தும் தீர்ந்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. இதைவிடப்பொருத்தமான இடத்தில்சிறந்த முறையில் சகல வசதிகளுடனும் புதிய பஸ்நிலையமொன்றை அமைக்க இலங்கைப் போக்குவரத்துச் சபையோடும் ஸ்தலஸ்தாபன அமைச்சினோடும் யாழ்ப்பாணமாநகரசபை ஆலோசனை செய்துஅவற்றின் உதவியையும் பெற முன்வரவேண்டும். நவீன சந்தை அமைக்கும் விஷயத்திலும் ஸ்தலஸ்தாபன அமைச்சின் ஆலோசனையையும் உதவியையும் பெறுவது நல்லது. இவைகளைச் செய்வதற்கு மாநகரசபை அங்கத்தவர்கள் தங்களுக்குள் உள்ள கருத்துவேறுபாடுகளை, நகரின் நலனைக் கருதிகைவிட வேண்டும். மாநகரசபை அங்கத்தவர்களையும் நல்லவழியில் திருப்புவதற்கு அவர்களைத் தெரிவு செய்து அனுப்பிய பொதுமக்களும் முயற்சி செய்ய வேண்டும்.

## வியட்நாம் பிரச்னை

வியட்நாம் பிரச்னை தீராத பிரச்னையாக இருப்பதும் வல்லரசுகளின் பலப்பரீட்சை வியட்நாமிலுள்ள அப்பாவி மக்களின் உயிரைப் பலிகொண்டுவருவதும் உலக சமாதானத்திற்கு நிச்சயம் ஆபத்தானதாகும்.

உலக சமாதானமே தங்களின் நோக்கமெனக் கூறிக்கொள்பவர்கள், சமாதானத்துக்கு ஆபத்து ஏற்படுத்தும் தாக்குதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது வேடிக்கையானது. இடையிடையே தாக்குதல்களை நிறுத்திக் கொள்வதால் பிரச்னைக்குத் தீர்வுகிடைத்துவிடாது. நிரந்தர அமைதியையும் ஏற்படுத்தமாட்டாது. சிலமணிநேர போர் ஓய்வு புதிய தாக்குதல்களுக்கான ஏற்பாட்டைச் செய்யும் ஓர் ஏற்பாடாகவேதான் இருக்கமுடியும். வியட்நாமில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா மட்டுமல்ல வடவியட்நாம், சீனா ஆகியவைகளுக்கும் பொறுப்பு உண்டு

வியட்நாமில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன்பாக வடவியட்நாம் மீதான விமானத் தாக்குதலை அமெரிக்கா நிரந்தரமாக நிறுத்திக்கொள்வதுடன், வியட்காங்கியரின் அரசியல் பீடத்தை அங்கீகரிக்க வேண்டுமென வடவியட்நாம் ஜனாதிபதி ஹோ-சி-மின் கேட்டிருக்கிறார். இந்தக்கோரிக்கையில் நியாயமிருப்பினும், எவருக்குமே நன்மை செய்யாத தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு எடுக்கப்படும் சமரச முயற்சிகளுக்கு நிபந்தனை விதிப்பது நியாயமானதாகவோ, சரியானதாகவோ தோன்றவில்லை.

இந்திய — பாகிஸ்தான் தகராறுகளுக்கு சோவியத் யூனியன் எடுத்த சமரச முயற்சி 'டாஷ்கண்ட்' பிரகடனத்தின் மூலம் வெற்றிபெற்றுள்ளதற்கு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகள் மூலகாரணம் என்பது நன்கறிந்த விஷயம்.

வியட்நாம் தகராறுகளுக்குத் தீர்வுகாண்பதற்கு நடுநிலைமை நாடுகளின் குழுவொன்று சமரச முயற்சியை மேற்கொள்வது நல்லதென பாப்பரசர் யோசனை கூறியிருக்கிறார். நடுநிலைமை நாடுகளாயினும் சரி, வலதுசாரி, இடதுசாரி நாடுகளாயினும் சரி, ராஜதந்திரத்துடன் வியட்நாம் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் சமரசத் தீர்வுகாண மேற்கொள்ளும் முயற்சி வீண்போவதற்கு இடமில்லை. 'டாஷ்கண்ட்' பிரகடனம் இதற்கு உதாரணம். உலக சமாதானத்தையும் அமைதியையும் விரும்பும் நாடுகள் அனைத்துக்கும் சமரச முயற்சியில் பங்கு உண்டு.

## பட்டினசபையிடம் பெருந்தொகைப் பணம்

காங்கேசன்துறை, ஞாயிறு

புயல் நிவாரணத்துக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட உதவிநிதி செலவு செய்யப்பட்டது குறித்து இன்று காங்கேசன்துறை பட்டினசபையில் பலத்த விவாதம் நடைபெற்றது.

புயலின்போது சேதம் அடைந்த மின்சார இணைப்புகளையும், பிறவற்றையும் சீர்படுத்தவென அரசாங்கம் 8500 ரூபா வழங்கியது. இதில் 5500 ரூபா செலவு செய்யப்பட்டதாக சென்ற 24ந் தேதி கூட்டப்பட்ட விசேட கூட்டத்தில் கணக்கு விபரம் பார்க்கப்பட்டதாகவும் அதை அங்கீகரிக்குமாறும் இன்றைய கூட்டத்தில் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டிருந்தது. சென்ற கூட்டத்தில் இவ்விஷயம் விவாதிக்கப்பட்ட போது 3 அங்கத்தவர்கள் மட்டுமே இருந்தார்கள் என்றும் இந்தக் கணக்கை அங்கீகரிக்க முடியாதெனவும் 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. சிவனடியார் தெரிவித்தார். அரசாங்கம் வழங்கிய தொகையிம் சுமார் 1000 ரூபா வரையிலே உண்மையில் செலவு செய்யப்பட்டிருக்கலாமெனவும், 5500 ரூபாவுக்கு செலவு செய்ததற்கு எவ்வித சான்றுமில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். நீண்ட விவாதத்தின் பின்னரும் இக்கணக்கு விபரம் அங்கீகரிக்கப்படாமலே கூட்டம் முடிவுற்றது.

பட்டினசபையிடம் பெருந்தொகையான பணமிருப்பதால் அதை வங்கியில் கட்டவேண்டுமென்றும் தலைவர் விரும்பிய எந்த வங்கியிலும் இதைச் செலுத்தலாமெனவும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்குத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமைவகித்தார். ஏராளமான பொதுமக்கள் இன்றைய கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

## 'பகைமையை மறந்து விடுங்கள்'

—நியமன எம். பி.

நாவலப்பிட்டி, ஞாயிறு

'தொழிற் சங்கம் பொருளாதார சமூக நலன் கருதி உழைக்கும் ஒரு இயக்கமாக இருக்கவேண்டும். அங்கத்தவர்களின் உயர் வாழ்வுக்காக அது உழைக்கவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு இன, மத வேற்றுமையை அறவே மறந்து ஒன்றுபட்டு உரிமைக்காக உழைக்கவேண்டும்.'

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமன எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமான் தோட்டத் தொழிலாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'கடந்த 20-வது வருடங்களாக தொழிலாளர்கள் சிங்களவர் தமிழர் என பிளவு பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் தொழிலாளர்களெல்லோரும் ஒன்றுபடும் காலம் இப்போது வந்துவிட்டது. இவ்விதம் ஒன்றுபட்டு தேசிய அரசாங்கத்திடம் தமது சட்ட பூர்வமான கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம்' என்றும் அவர் கூறினார்.

## பொலிஸ் இலாகா இடமாற்றங்கள்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

சமீபத்தில் பாணந்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. வி. டி. டிக்மன் தற்போது மீண்டும் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புபகுதி பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிகளாகவிருந்த மூன்று பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கொழும்பிலிருந்து வேறிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கறுவாக்காடு, கொள்ளுப்பிட்டி, நாரன்பிட்டியா ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்தவர்கள்.

## தீர்த்தக்கேணி

வேலணை, ஞாயிறு

வேலணை வெள்ளக்கடற்கரையில் தோண்டப்பட்ட கேணி வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து கட்டுவேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் உதவியுடனும் தனது சொந்தப்பணத்தினாலும் விடாமுயற்சியினாலும் இத்தீர்த்தக் கேணி வேலையைமடுவார்வே. வயித்திலிங்கம்நடாத்திவருகிறார்.

(5ம்கலத்தொடர்ச்சி)

8 மாதங்களுக்கு முன் சென்னையிலே அவரைக் கண்டு விசாரித்தேன். இலங்கைத் தமிழரைப் பற்றி எல்லாம் ஆவலுடன் கேட்டார். இவ்வளவு சீக்கிரத்தில் அவர் மறைந்துவிடுவாரென்று அப்போது தோன்றவில்லை. தமிழ்ப்பத்திரிகை உலகுக்கு அவர் செய்த பணியைச் சென்னையிலே பலபத்திரிகைகளும்போற்றி எழுதியுள்ளன. அவர் பெயராலே தமிழ்ப் பத்திரிகைக்காரர்களுக்கான நல்லதோர் பயிற்சி ஸ்தாபனத்தைச் சென்னையில் அமைப்பது பயனுள்ள ஞாபகச் சின்னமாக இருக்கும். அவர் ஆத்மா சாந்தி அடைக.

ஃ ஃ ஃ

பரத்தானை யிப்பக்கம் பலவானைப் பசுபதியைப்
பத்தர்க்கு முத்திகாட்டும்,
வரத்தானை வணங்குவார் மனத்துளானை மாருதமால்
எரிமூன்றும் வாய்அம்பீர்க்
காஞ், சரத்தானைச்சரத்தை யுத்தன் தாட்கீழ்வைத்த
தபோதனனைச் சடாமகுடந்
தணிந்தபைங்கட், இரத்தானைத் திருவீழிமிழலையானைச்
சேராதார் தீநெறிக்கே
சேர்கின்றாரே.

—அப்பர் சுவாமிகள்

# ஐயாறன் எழுதுகிறது

பிரம்மஸ்ரீ ஞானசேகரக் குருக்களின் மறைவு ஈழத்துச் சைவசமூகத்துக்குப் பெரும் இழப்பாகும். இங்கு நூற்றுக்கணக்கானவர்களும் சிறப்பாகச் சைவ மாணவர்களும் அப்பெரியாரிடம் சிவதீட்சை பெற்றுள்ளனர். அதை ஒரு தொழிலாக இன்றி முக்கியமான சமய சேவையாகச் செய்துவந்தார் அப்பெரியார்.

இன்று சைவசமூகம் மிகப் பலவீனமாக இருப்பதற்குக் காரணமென்ன? அதைப் பலப்படுத்த என்ன செய்ய வேண்டுமென்று அவரிடம் ஒருசமயம் கேட்டேன். "சைவ சமூகத்தில் பிறந்ததினால்மட்டும் ஒருவர் சைவராகிவிடமுடியாது; சைவத்தின் பயனையும் பெறமுடியாது; குருமுகமாக ஐந்தெழுத்து மந்திர உபதேசம் பெற்று, அம்மந்திரத்தைத் தினசரி "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஓதவேண்டும். வேதநான்கினும் மெய்ப்பொருளான அந்த மந்திரத்தை அப்படி நம்பிக்கையுடன் ஓதுவார்கள் நன்னெறியடையலாம். எல்லா நன்மைகளும் பெறலாம். இன்று சைவசமூகத்தில் ஆயிரத்தில் ஒருவர்தானும் சிவதீட்சை எடுத்து, ஐந்தெழுத்து மந்திரத்தைப் புனைப்பிடித்துக் கிடக்கின்றார்களா என்பது சந்தேகம். அதனால்தான் சைவசமூகம் இன்று பலவீனமாக இருக்கிறது. சைவசமூகத்தில் பிறந்தவர் அனைவரும் சிவ மந்திரத்தை ஒரு கவசமாகப் பூண்டால்தான் சைவ மக்களின் வாழ்வு மேம்பட்டு சைவசமூகம் தலைநிமிர்ந்து வாழ்ந்து முன்னேறமுடியும்" என்று கருத்துத் தெரிவித்தார். வெறும் பேச்சுடன் நில்லாமல் சிவ மந்திரத்தைப் பலருக்கும் உபதேசிப்பதைத் தமது வாழ்க்கைக் கைங்கரியத்தில் ஒன்றாகக்கொண்டார் அவர்.

அவர் செய்த அந்தக் கைங்கரியத்தை இங்குள்ள மற்றக் குருமார்களும் சைவ ஸ்தாபனங்களும் செய்வதாயின் சைவசமூகம் தழைத்தோங்கும். இதுவே அப்பெரியாரின் ஆத்மா சாந்தி அடைவதற்குச் செய்யக்கூடிய பணியாகும்.

ஃ ஃ ஃ

சென்னையிலே மறைந்த பேராசிரியர் டி. எஸ். சொக்கலிங்கத்தாருக்கு அஞ்சலி செலுத்தவேண்டியது எனது முக்கியமான கடமை. அவர்தான் எனக்குப் பத்திரிகைத் தொழிலில் முதற்குரு. 36 வருடங்களுக்கு முன்பாகச் சென்னையிலே தென்னாட்டுத் திலகரெனப் பட்டடாக்டர்வரதராஜுலு நாயுடுகாரு நடத்திவந்த 'தமிழ்நாடு' எனும் தினசரிப் பத்திரிகைக்கு சொக்கலிங்கம் அவர்கள் ஆசிரியராக இருந்தார்கள். கம்பீரமான தோற்றம்.

எவ்வளவு சிக்கலான விஷயத்தையும் பாமரமக்களும் நன்கு புரிந்துகொள்ளக் கூடிய எளிய தமிழிலே எழுதும் சக்திவாய்ந்தது அவரது பேனா. யாருக்கும் அஞ்சாத தீரர் அவர். மலை சரிந்தாலும் மனம் கலங்காதவர். பிரம்மச்சாரி. சக்தி உபாசகர். தமது பேனாவினால் தேசவிடுதலைக்குப் பாடுபட்டவர். சிறை சென்ற தேசபக்தர். காந்தீயவாதி. தமிழ்ப்பத்திரிகை உலகிலே ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராக இருந்து வழிகாட்டியவர். 'மணிக்கொடி' இயக்கத்தின் மும்மூர்த்திகளில் முதல்வர்.

(4-ம்கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க செனட்:

# வியட்னும் சண்டையை நடத்தும் ஜோன்ஸனின் அதிகாரம் வாபஸ்பெற ஜனநாயகக்கட்சி அங்கத்தினர் பிரேரணை

## நடுநிலை நாடுகள் மத்யஸ்தம் செய்ய போப்பாண்டவர் யோசனை

வாஷிங்டன், ஜன. 30

வியட்னுமில் சண்டை நடத்த ஜனதிபதி ஜோன்ஸனுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் வாபஸ் பெறப்படவேண்டும் என அமெரிக்க செனட்டில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

வியட்னுமில் சண்டை நடத்தப்படும் முறை பற்றி செனட் பரிசீலிக்க வேண்டுமென்று மற்றோர் தீர்மானமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஜனநாயகக் கட்சி அபேட்சகர் திரு. வெயின் மோர்ஸ் கொண்டுவந்துள்ள மேற்கண்ட இரு தீர்மானங்களும் வெளிநாட்டு உறவுக் கமிட்டியின் பரிசீலனைக்குச் செல்லும்.

வியட்னுமில்புதுவருடத்தை முன்னிட்டு 182 தென்வியட்னும் கைதிகளை வியட்காங்கியர் விடுதலை செய்திருக்கிறார்கள்.

வியட்னும் பிரச்னையைத் தீர்க்க நடுநிலைமை நாடுகளைக் கொண்ட குழு மத்தியஸ்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என போப்பாண்டவர் பால் யோசனை கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் சைகோனுக்கு வடகிழக்கே 300 மைல் தூரத்தில் அமெரிக்கத் துருப்புகளுக்கும் வியட்காங்கியர்களுக்குமிடையே 24 மணி நேரம் கடும் சண்டை நடைபெற்றதாயும், இதில் 100 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வியட்காங்கியர் பின்வாங்கினர்கள் என்றும், அமெரிக்கருக்கும் கடும் சேதம் ஏற்பட்டதென்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

# கேரளத்தில் இதுவரை 151 பேர் கைது

திருவனந்தபுரம், ஜன. 30

கேரளத்தில் ஹர்த்தாலை அடுத்து இதுவரை 151 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தின் விளைவாக ரூ. 50000க்கு சொத்து நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஹர்த்தால் காரணமாக உணவுப் பொருட்கள் அனுப்புவதில் தடங்கல் ஏற்பட்டதாயும், பிரதமர் இந்திராவின் உத்தரவுக் கிணங்க விசேஷ ரயிலில் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டு வருவதாயும் அறிவிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக ரயில்போக்கு ஸ்தம்பிதமடைந்ததால் பஞ்சாபிலிருந்து 10000 டன் உணவுப் பொருட்கள் கப்பலில் வந்துகொண்டிருக்கின்றன.

இன்று முதல் கேரளத்தில் ரேஷனுக்கு 140 கிராம் அரிசி வழங்கப்படுகிறது.

கோதுமையுடன் மொத்த ரேஷன் 280 கிராம் வழங்கப்படுகிறது.

மத்திய ராஜாங்க உணவு மந்திரி திரு. பி. கோவிந்த மேனன் நேற்று எர்ணுகுளம் வந்து சேர்ந்தார்.

ஸ்ரீமதி இந்திராகாந்தியின் மந்திரிசபை நடத்திய முதல் கூட்டம், உணவுப் பிரச்னை பற்றியே முதலில் கவனம் செலுத்தியதாயும், கேரள நிலைமை விசேஷமாக ஆராயப்பட்டதாயும் திரு. கோவிந்த மேனன் நிருபர்களிடம் கூறினர்.

திருவனந்தபுரம் ராஜபவனத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்குள் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியன நடத்தப்படக்கூடாது என உத்தரவிடப்பட்டிருக்கிறது.

# அமெரிக்கர்வின் விசேஷ உதவி நாடுகள் பட்டியல்

## இந்தியா, பாகிஸ்தானுக்கு முதலிடம்

வாஷிங்டன், ஜன. 30

அமெரிக்க வெளிஉறவுத் திட்டத்திலுள்ள கேந்திர அபிவிருத்திநாடுகளின் பட்டியலில்இந்தியாவும் பாகிஸ்தானும் விசேட உதவி முயற்சிக்கான முதலிடம் பெற்றிருக்கின்றன

கேந்திர அபிவிருத்தி நாடுகள் என்ற வரிசையில் இலங்கையின் பெயர் காணப்படவில்லை.

எனினும் துருக்கி, கொரியக்குடியரசு, பிரேஸில். சில்லி, கொலம்பியா, டுனிஷியா, தென்வியட்னும் ஆகிய நாடுகள் இதர ஜாபிதாவில்இடம்பெற்றிருக்கின்றன.

வியட்காங்குடன் தற்போது யுத்தத்திலீடுபட்டிருக்கும் தென்வியட்னுமுக்கு பெருமளவு பொருளாதார உதவி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனல் திரு. ஜோன்ஸனின் ஆசியஅபிவிருத்திவங்கி திட்டத்தின் மூலம் இலங்கை பலன் பெறும் எனக்கூறப்படுகிறது.

ஜாகர்த்தா, ஜன. 30

இந்தோனேஷியாவிலிருந்து சீன பத்திரிகை நிருபர்கள் வெளியேற்றப்படுவார்கள் என வெளிநாட்டு மந்திரி டாக்டர் சு[illegible] அறிவித்திருக்கிறார்.

## இலங்கைப் பிரதிநிதி

லண்டன், ஜன. 30

யோர்க்ஷயரில் நடைபெற்ற உலகப் பல்கலைக்கழச் சேவையின் பிரிட்டிஷ் கமிட்டியின் மூன்றுநாள் மகாநாட்டில் பலாங்கொடையைச் சேர்ந்ததிரு. ஆர். நடராஜா இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்தகொண்டார். பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் மிருக அறுவைச் சிகிச்சையைப் பற்றிப் படித்துவரும் இவருடன் இன்னும் 200 பேர் மகாநாட்டில் பிரசன்னமாயிருந்தனர். உலகப் பல்கலைக்கழக சேவையின் கமிட்டிகள் இப்போது 60 நாடுகளில் உள்ளன என்று மகாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

## உபவேந்தர் காலமானர்

வேலூர், ஜன 30

பங்களூர் பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் லாவோரியா வேலூர் ஆஸ்பத்திரியில் காலமானர். பிரபல கல்விமானன அவருக்கு வயது 64.

அயூப் மறுப்பு

## பூட்டோவுடன் வேற்றுமை இல்லை

ராவல்பிண்டி, ஜன. 30

பாகிஸ்தான் மந்திரிசபை மாற்றியமைக்கப்பட இருப்பதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தியை ஜனதிபதி அயூப்கான் நிருபர்களிடம் மறுத்துரைத்தார்.

தமக்கும் வெளிநாட்டு மந்திரி பூட்டோவுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதென்ற செய்தியையும் அவர் மறுத்தார்

டாஷ்கண்ட் பிரகடனம் இருநாடுகளும் சமாதானத்தில் கொண்டுள்ள உறுதியை எடுத்துக்காட்டுகின்றது என்றும் அயூப் கூறினர்.

டாஷ்கண்ட்பிரகடனத்தை அடுத்துக் கடந்த 3 வாரங்களாக அஸ்ஸாம்-கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் பூரண அமைதி நிலவுவதாயும், எவ்வித துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெறவில்லையென்றும் டில்லியில் அறிவிக்கப்பட்டது.

## அபாயநிலையில் சவர்க்கார்

பம்பாய், ஜன. 30

மாபெரும் புரட்சிவீரரான திரு. வி. டி. சவர்க்கார் கடும் சுகவீனமுற்று இருப்பதாயும், உணவு உட்கொள்ளவும் இயலாதநிலையில் இருப்பதாயும், உடல் நிலை அபாயமாய் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

# சீனர்கள் அழித்துவரும் திபேத்திய கலாச்சாரம்

புதுடில்லி, ஜன. 30

திபேத்திய கலாச்சாரத்தின் கடைசிச் சின்னத்தையும் அழிக்கும் முயற்சியில் சீனர்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

நகரங்களிலுள்ள திபேத்திய கலாச்சார சின்னங்கள் அகற்றப்பட்டு சீனத்தோற்றத்துடன் கூடிய கட்டுமானங்கள் நடைபெறுகின்றன என்றும் தலைநகர் லாஸா திபேத்திய கலாச்சாரத்தை இழந்த நிலையில் முற்றும் சீன நகரைப் போன்ற தோற்றம் அளிப்பதாயும் கூறப்படுகிறது

திட்டமிட்ட முறையில் இந்த வேலைகள் நடைபெற்றுவருகின்றனவாம்.

ஆயிரக்கணக்கான திபேத்தியகுழந்தைகள் சீன கலாச்சார போதனைக்காக சீனுவுக்கு அனுப்பப்பட்டு வருகிறதென்றும் திபேத்தில் குடியேறியுள்ள பல்லாயிரக்கணக்கான சீனர்களை மணக்கும்படி திபேத்திய இளம்பெண்கள் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

பெரும்பாலான சீனர்களை அங்கு குடியமர்த்துவதன் மூலம் திபேத்தியர்களை திபேத்திய பூமியிலேயே சிறுபான்மையினராக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஆஸ்திரேலியாவில் பிரிட்டிஷ் இளவரசர்

கான்பரா, ஜன. 30

பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ்(வேல்ஸ் குமாரர்) இன்று ஆஸ்திரேலியாவில் கல்வி கற்கும் பொருட்டு இங்கு வந்து சேர்ந்தபோது கவர்னர் ஜெனரல் கேஸி, பிரதமர் கோல்ட் ஆகியோர் அவரை வரவேற்றனர். பாடசாலை செல்லும்வரை சார்ள்ஸ் இளவரசர் கவர்னர்ஜெனரலுடன் தங்கியிருப்பார்.

## அணு விமானம் பறக்கக்கூடாது

### ஸ்பெயின் தடை

மாட்ரிட், ஜன. 30

அணுஆயுதங்களை ஏற்றிச் செல்லும் எந்த அமெரிக்க விமானமும் தனது நாட்டின் மீது பறக்கக்கூடாதென ஸ்பெயின் தடைவிதித்துள்ளது. நெருக்கடி காலத்தில் விசேஷ அனுமதியுடன் மட்டுமே அப்படிச்செய்யலாமென்றும் அது கூறியிருக்கிறது. சமீபத்தில் அணு ஆயுதம் ஏற்றிச்சென்ற 'பி 52' அமெரிக்க விமானம் ஸ்பெயினில் நொறுங்கி விழுந்ததையடுத்து இம் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

## அப்துல்லாவை விடுதலைசெய்க

ராவல்பிண்டி, ஜன. 30

டாஷ்கண்ட்பிரகடனத்தை அடுத்துச் சுமுக உறவுநிலவும்வகையில் ஷேக்அப்துல்லாவையும், இதர அரசியல் கைதிகளையும் நிப்நதனையற்ற முறையில் இந்தியா விதலை செய்யவேண்டும் எனப் பாகிஸ்தான் அவாமி செயல்கமிட்டி கோரியுள்ளது.

## நாஸருக்கு ஜப்பான் அழைப்பு

டோக்கியோ, ஜன. 30

ஜப்பானுக்கு விஜயஞ் செய்யுமாறு ஐக்கிய அராபியக்குடியரசுத் தலைவர் நாஸரையும், சவூதி அரேபிய மன்னர் பைஸாலையும் பிரதமர் ஸாட்டோ கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## ரோமெய்ன் ரோலந்து

கல்கத்தா ஜன. 30

ரோமெய்ன் ரோலந்தின் நூற்றுண்டுவிழாக் கூட்டம் நீதிபதி திரு. எஸ். ஆர். தாஸ் தலைமையில் இங்கு நடைபெற்றது.

## ஜெனரல் ரிக்கி

நியுயோர், ஜன. 30

காஸாவிலுள்ள ஐ நா. படைகளின் தளபதியாகப் பொறுப்பேற்க இந்தியாவைச்சேர்ந்த ஜெனரல் இந்திரஜித் ரிக்கி காஸா புறப்பட்டார்.

## வேலணை கிராமசபை தீர்மானம்

வேலணை, ஞாயிறு

வேலணை கிராம சபையின் மாதாந்தக்கூட்டம்தலைவர் திரு. பு. புண்ணியம் தலைமையில் நடைபெற்றது.

கடந்த வருடங்களில் மொழிப்பிரச்னை காரணமாக அரசாங்க சேவையிலிருந்து விலகிய அரசாங்க ஊழியர் அனைவரையும், தற்பொழுது தமிழ் விசேஷசட்டம் நடைமுறைக்கு வருவதால் மீண்டும் அவர்களுக்கு முன் கடமையாற்றிய ஸ்தானங்களில் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டது.

மேற்படி கூட்டத்தில் வேலணை அரசினர் மத்திய கல்லூரியிலிருந்து ஆறு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டும், அந்த காலி ஸ்தானங்களுக்கு ஆசிரியர்கள் ஒருவரும் நியமிக்கப்படாமை குறித்து மேல் அதிகாரிகளுக்கு இதுவிஷயமாக அறிவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஒருவர் மட்டுமே சித்தி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியின் 1964—1965 கழக ஆண்டு தமிழ் சுருக்கெழுத்துப் பரீட்சையில் ஒருவர் மட்டுமே சித்தியடைந்துள்ளார்.

1963—64 கழக ஆண்டில் பிட்மன்ஸ்—சுப்பிரமணியம் தமிழ் சுருக்கெழுத்து முறைகள் பயிற்றுவிக்கப்பட்டபோதுபெருந்தொகையானவர்கள் சித்தியடைந்தார்களென்றும் இப்பொழுது சுப்பிரமணியம் சுருக்கெழுத்து முறையில் மட்டுமே பரீட்சை நடத்தப்படுவதாலேயே பலர் சித்தியடைய முடியாதிருப்பதாக அகில இலங்கை தமிழ் சுருக்கெழுத்து கலை முன்னேற்ற அபிவிருத்திச் சங்கம் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிலிப்பைன்ஸில ஜவஹர் நூலகம

மணிலா, ஜன. 30

பிலிப்பைன்ஸ் பல்கலைக் கழகத்தில் ஏற்படவிருக்கும் 'ஜவஹர் நூலகத்' திற்கு ரூ. 10000 பெறுமதியான புத்தகங்களை டில்லி அரசாங்கம் அளித்திருக்கிறது.

## சீனர்கள் 2 வீரரை ஒப்படைத்தனர்

கேங்டாக், ஜன. 30

சமீபத்தில் சிக்கிம் எல்லையில் ஏற்பட்ட கைகலப்பின்போது சீனர்கள் பிடித்து வைத்திருந்த இரு இந்திய வீரர்கள் நேற்று திருப்பி ஒப்படைக்கப்பட்டனர்.

அனுபவமுள்ள வைத்தியரின் மேற்பார்வையில்

**சித்த வைத்திய மருந்துகள்**

**ஆயுர்வேத மருந்துகள்**

**மருந்துச் சரக்குகள்**

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிறதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## வெளிநாட்டுக் கல்வி வசதி

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் வசதியில்லாத கல்வியைப் பெறுவதற்கு வெளிநாடு செல்பவர்களுக்கு அந்நிய செலாவணி வழங்குவதில், சென்ற வருடத்தைவிட இவ்வருடத்தில கூடுதல் சலுகை வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரயாணச்செலவுப்பணம் சென்றவருடத்தில் போன்றேஇம்முறையும் அனுமதிக்கப்படுமாம்.

யாத்திரீகர்களுக்கு செலாவணி அனுமதிப்பதில் பௌத்தர்களுக்கும் இதர சமயத்தவர்களுக்கும் இடையில், பாரபட்சம் காண்பிக்கப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ள புகார் பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

## தியாகிகள் தினம்

புதுடில்லி, ஜன. 30

காந்திஜீ இறந்த தினமான இன்று நாடெங்கும் தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## 70 பேரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது

கொழும்பு, ஞாயிறு

மத்தியவங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றும் வெளிநாட்டவர் ஒருவர், அவரது கம்யூனிஸ நடவடிக்கைகள் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டிருந்தாரென்றும் வங்கியில் தேசிய அரசாங்கத்துக்கு எதிரான சதி நடவடிக்கைகளில் அவர் தீவிர பங்குகொண்டிருக்கிறாரென்றும் இரகசியப் பொலிசாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன. அந்த அதிகாரி இப்பொழுது வேறு இலாகாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

இம்மாதம் 8-ந் திகதி வேலைக்கு வரத்தவறிய மத்தியவங்கி ஊழியரில் 70பேரிடம் வேலைக்கு வரத்தவறியதற்கான காரணம்கேட்கப்பட்டுள்ளது.

## ஆசிரியருக்கு பொன்னுடை

உடுப்பிட்டி, ஞாயிறு

''ஆசிரியத்தொழில் மிகவும் புனிதமானது. நாட்டின் வருங்கால சந்ததியை உருவாக்குவது'' என்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டி மேற்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் (நாவலர் மடம்) கடந்த 40 ஆண்டுகளாகத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறும் திரு. எஸ். வேலாயுதத்திற்கு நெல்லியடி மஹாத்மா தியேட்டரில் வைத்து அளிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

வித்துவான் திரு. க. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திருவாளர்கள் வீ. தர்மசங்கரி, ஜே வே. செல்லத்துரை, ஆ. கணபதிப்பிள்ளை, க. கார்த்திகேசு ஆகியோருட்படப் பலர் ஆசிரியரைப் பாராட்டிப் பேசினர். வாழ்த்து மடல்களும் வாசித்தளிக்கப்பட்டது. உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் திரு. ஜே. எஸ். வேலாயுதத்திற்குப் பொன்னுடை போர்த்தினர்.

## சுதந்திரதின ஏற்பாடுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

எதிர்வரும் இலங்கையின் சுதந்திரத்தினத்தை முன்னிட்டு நெல்லியடி சனசமூக நிலையத்தின் சார்பில் கரபந்தாட்டப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சுதந்திரதினத்தன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் கரபந்தாட்டப் போட்டிகளில் மந்திகை, பருத்தித்துறை, நவிண்டில், கரவெட்டி, துன்னாலை, வதிரி ஆகிய இடங்களிலிருந்து விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ளவிருக்கின்றன. சுதந்திரதினத்தை முன்னிட்டு அன்றிரவு மேற்படி நிலைய மண்டபத்தில் பொதுக் கூட்டமொன்றும் நடைபெறும்.

## புதிய சட்டம் ஆலோசனை

பம்பலப்பிட்டி, ஞாயிறு

நாட்டில் இன, மத வெறியாட்டங்களைத் தூண்டிவிடுபவர்கள் மீது பூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதற்காக உருவாக்கப்படவிருக்கும் புதிய சட்ட விதிகளை எவ்வாறு தயாரிக்கலாம் என்பதில் அரசாங்கம் அதிகசிரத்தை எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

இதற்காக இது சம்பந்தப்பட்ட அமெரிக்க சட்ட விதி அமைப்பை துணைக்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

## மந்திரிக்கு எம். பி. புகார்

யாழ்ப்பாணம், திங்கள்

இ. போ. ச.வில் உள்ள கணக்குப் பரிசோதகர் தெரிவு நடைபெற்றபோது தெரிவில் பல ஊழல்கள் நடைபெற்றதெனவும் உடனே அவற்றை விசாரிக்க வேண்டுமெனவும் கிளிநொச்சி எம். பி. திரு. க. பொ. இரத்தினம் தேசிய அமைச்சர் திரு. பி. ஏ. சுகததாசாவிற்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தவரில் மூன்றில் ஒருபகுதியினர் தமிழராக இருந்தும் ஒரு தமிழரேனும் தெரியப்படவில்லையென்பதையும் திரு. இரத்தினம் மந்திரிக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## வைரவர் கோவில் உற்சவம்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை மாங்கொல்லை வைரவர் கோவில் வருடாந்த உற்சவம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. 12 தினங்கள் ஆலய உற்சவம் தொடர்ந்து நடைபெறும்.




## கொழும்பு

**திங்கள் 31 - 1 - 66**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இசைக்கச்சேரி, 7-45கலை ஏடு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 எங்கள் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் கடமையாற்றிய இரு ஊழியர்களுக்கு சமாசத் தலைவர் டாக்டர் செங்காதரம்பிள்ளை தலைமையில் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது. திரு. நா. நாகலிங்கம், திரு. க. பாலசுப்பிரமணியம் ஆகிய இருஊழியரின் சேவையையும் பாராட்டிப் பலர் பேசினர்.

## புதிய நியமனம்

நல்லூர், திங்கள்

உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு. டி. நவரத்தினம் உள்ளூராட்சி சேவை சபைக்கு ஒரு அங்கத்தினராக அமைச்சரினல் நியமிக்கப்பட்டுள்ளார்.

எனக்கு மிகவும் பிரியமானது



CEYLON CHOCOLATES LTD

**கன்டொஸ்**

*உயர்ந்த ரகச் சொக்கலேற்று*




ஏகவிநியோகஸ்தர்கள்:

ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,

கொழும்பு - 3.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## யாழ்ப்பாண மாநகரசபை
## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிய வேண்டியது யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் பகிரங்க வீதிகளிலும் நிலங்களிலும் காணப்படும் ஆடு, மாடு, பன்றி ஆகிய கால்நடைகளைப் பிடிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு பிடிக்கப்படும் மிருகங்கள் யாவும் மாநகர மண்டபவளவில் கட்டப்பட்டு பின் உரிமையாளர் தங்கள் கால்நடையின் பிடிகூலி, உணவுக்காசு ஆகியன கட்டிய பின்னரே திருப்பிப் பெற முடியும்.

பிடிபட்ட ஒரு கால்நடையைப் பத்து- 10 நாட்களுக்குள் அதன் உரிமைக்காரர் கோராவிட்டால் அது பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். அதன் பின் எவரும் உரிமை கோர முடியாது.

ஆகவே இனிமேலாவது கால்நடைகளைத் தகுந்த பாதுகாப்பில் கட்டி வளர்க்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(கட்சன் செல்வராசா)
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25-1-66 1576

## விளம்பரம்
## அறிவித்தல்

படங்கள், வரைவுகள், விபரக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தகுதி பெற்றவரென்று யாழ்ப்பாண மாநகரசபையில் பதிவுசெய்யப்பட்டிருப்பவர்களால் வரையப்பட்டிருந்தாலன்றி, யாழ்ப்பாண மாநகர அதிகார எல்லைகளுக்கு உள்ளே கட்டப்பட இருப்பதான கட்டிடங்களின் படங்கள், வரைவுகள், விபரக்கூற்றுக்கள் எவையும், 1966-ம் வருடம் மார்ச் 1-ம் தேதியிலும், அதன் பின்னரும், அங்கீகரிக்கப்படும் பொருட்டு ஆலோசனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதை, 1915-ம் வருட 19ம் இலக்க வீடு, நகர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் 8 (ஏ) பிரிவின்கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

அப்பேற்பட்ட படங்கள் யாவும் ஒரு ரூபா கட்டணம் செலுத்தி மாநகர அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட படிவங்களிலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டும். 28-2-66-ம் திகதிக்குப்பின்னர் பழைய கட்டிட விண்ணப்ப படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

சி. நாகராஜா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-1-66. 1574

## ஐக்கிய நாணய சங்க நிர்வாகிகள்

சுழிபுரம், சனி

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்னர்:

லைவர்: இ. அப்பாத்ர, உபதலைவர்: வெ. னயா, காரியதரிசி: மா. கியநாதன், உபகாரிய வெ. பரமு, தனாதி இ. ஆறுமுகம். 6 கொண்ட நிர்வாக ம் தெரிவு செய்யப் .

## அறிவித்தல்

1915-ம் வருட 19-ம்இல· வீடு நகர் திருத்தக் கட்டளைச்சட்டத்தின்கீழ், எமது அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் பொருட்டு படங்கள், வரைவுகள், விபரக் கூற்றுக்களை வரையும் நோக்கத்திற்கு அங்கீகாரம் பெற்றவரென்று பதிவுசெய்யப்படும் பொருட்டு தகுதி பெற்றவர்களிடமிருந்து 20-2-66-ம் திகதிவரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வீடு, நகர் திருத்தக் கட்டளைச்சட்டத்திற்கு அமைய அப்பேற்பட்ட படங்களை வரையவும், விபரக் கூற்றுக்கள் முதலியவற்றைத் தயாரிக்கவும் தாம் தகுதிபெற்றவர்களென நிரூபிக்கக் கூடிய சான்றுகளை விண்ணப்பக்காரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

படங்கள் வரைவதற்குத் தகுதி பெற்றவர்களென, பதிவு செய்யப்படுவதற்குத் தெரிவுபெறுவோர் யாவரும், துணை விதிகளுக்கு அமைய எம்மால் நிர்ணயிக்கப்படக்கூடிய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தும்படி கேட்கப்படலாம்.

சி. நாகராஜா
மாநகர முதல்வர்
யாழ்ப்பாணம்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18—1—66, 1575

## சனசமூகநிலையம் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்திற்கும் சுண்டிக்குளி கிஷ்றின் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில்நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட்போட்டியில் கடுமையான போட்டியின் பின்னர் சனசமூக நிலையக்கோஷ்டியினர் 14 ஓட்டங்களால் சுண்டிக்குளி கிறிஷன் கோஷ்டியைத் தோற்கடித்தனர். முதலில் துடுப்பெடுத்தாடிய சனசமூக நிலையக்கோஷ்டி காப்டனான நவரத்தினமும் இணைவீரனான சாம் செல்வரும் அதிகநேரம் துடுப்பெடுத்தாடி கிறிஷன் கோஷ்டி வீரர்களைப்படாதபாடுபடுத்தினர். மேலும் இக்கோஷ்டியைச் சேர்ந்த சிறந்த துடுப்படி வீரர்களான சுந்தரேசன்' திருநீலகண்டன் ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப்பெற்று 61 ஓட்டங்கள் பெற்றனர். கிறிஷன் கோஷ்டியினரின் முதலாவது ஆட்டத்தில் மங்களராஜா என்னும் வீரர் 32 ஓட்டங்கள் பெற்று மொத்தம் 72 ஓட்டங்கள் பெற்றனர். இரண்டாவது ஆட்டத்தில் சனசமூகநிலையக் கோஷ்டியினர் 45 ஓட்டங்கள் பெற்றனர். இதில் கா,இரகுநாதன், சந்திரமோகன் ஆகிய வீரர்கள் அதிகமான ஓட்டங்கள்பெற்றனர். கிறிஷன் கோஷ்டியினர் இரண்டாவது ஆட்டத்தில் 20 ஓட்டங்கள் பெற்றனர். இக்கோஷ்டியில் தேவகுமார் என்னும் வீரர்சிறந்த பந்தெறி வீரனாகக் காணப்பட்டார். முடிவில் நல்லூர்தெற்கு சனசமூகநிலையக் கோஷ்டி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றனது. இப்போட்டி நல்லூர் தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம்

# விளையாட்டரங்கு கம்பனி நிர்வாகத்தின்கீழ் வரும்?
## நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிக்கும்

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கினை கம்பெனி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதினால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி பரிசிலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் வண்ணம் பருத்தித்துறை நீதிபதி திரு. அப்துல் காதர் தலைமையில் சட்ட நிபுணர்களடங்கிய குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் முன்னாள் எம். பி. திரு. அல்பிறட் துரையப்பா தலைமையில் நடைபெற்ற விளையாட்டு அரங்கு கூட்டத்திலேயே மேற்குறிப்பிடப்பட்ட குழு தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் திறந்த வெளி விளையாட்டு அரங்கினை கம்பெனி அமைப்பின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதனால் விளையாட்டு அரங்குக்கு கிடைக்கக் கூடிய நன்மைகள் பற்றி நியமிக்கப்பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்ததும் விளையாட்டரங்கு நிர்வாகசபை அதனைப் பரிசிலனை செய்யும். பின் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கம்பெனி பார்க்கும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரை தற்போதிருப்பது போலவே விளையாட்டரங்கு நிர்வாகம் இருந்து வரும்.

விளையாட்டரங்கு நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

# ஆசிரியபயிற்சிக் கலாசாலை பற்றி இங்கும் விசாரணை

பம்பலப்பிட்டி, ஞாயிறு

ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளின் வேலைகள் பற்றி விசாரணை செய்வதற்காக கல்வி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட கமிட்டி யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள நான்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கும் அடுத்த மாதத்தில் விஜயம் செய்யவிருக்கிறது. கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குக் கமிட்டி ஏற்கனவே விஜயம் செய்துள்ளது.

ரோயல் கல்லூரி அதிபர் திரு. டட்லி டி. சில்வாவை தலைவராகவுள்ள ஐந்து பேர் கொண்ட இக்கமிட்டி ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு மேலும் பயிற்சியாளர்களை சேர்ப்பது, மேற்படி கலாசாலைகளில் மேலும் வசதிகள் ஏற்படுத்துவது, இடவசதி ஆகியவை சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும். இன்னும் இரு மாதங்களில் கமிட்டி கல்வி மந்திரியிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

## வல்லை நெசவு நிலையம்
### விஸ்தரிக்கப்படும்

வல்வெட்டித்துறை. ஞாயிறு

வல்லைவெளியில் தற்பொழுது இயங்கிக் கொண்டு வரும் நெசவு நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. ஜப்பானிலிருந்து 100க்கு மேற்பட்ட மின்சாரத் தறிகளை வரவழைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

## புகைப்பதை தடை செய்யக் கோரிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறையில் உள்ள சினிமாத் தியேட்டரில் புகை பிடிப்பதைத் தடை செய்யும்படி கோரும்மகஜரொன்றைப் பருத்தித்துறை நகரசபைத் தலைவருக்கு நெல்லியடி சினிமா ரசிகர் சங்கம் அனுப்பியுள்ளது.

# வரி விளம்பரம்

## புதுமனைப் பிரவேசம்

நிகழும் 1966-ம் ஆண்டு மாசிமாதம் 2-ந் திகதி புதன் கிழமை பகல் 12 மணிக்கு எமது(பிரான்சீஸ்கா செல்வவாசம்) என்னும் இல்லத்தில் பிரவேசம்செய்ய இருப்பதால் அத்தருணம் நண்பர்களும் உறவினர்களும் சமுகம்தந்து புதுமனையை ஆசீர்வதித்து எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். நல்வரவை எதிர்பார்க்கும் அந்தோனிப்பிள்ளையும் பாரியாரும். பிரான்சீஸ்கா செல்வவாசம், 3-ம் வட்டாரம், மண்டைதீவு. 1830

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, நீரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## திருமணம்

இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஆ. தா. சுப்பிரமணியம் ஆசிரியை திருமதி சுப்பிரமணியம் ஆகியோரின் கனிஷ்ட புத்திரி எலிசபெத் மங்களநாயகிக்கும், கந்தையா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திரு. நவரத்தினராசாவிற்கும் கட்டைடைவேலி திருத்துவ தேவாலயத்தில் இம் மாதம் 27-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் வெகுவிமரிசையாக திருமணம் நடைபெற்றது.

வெள்ளை நீலவர்ணச் சடுகைகளினாலும் சவுக்குகளினாலும் கட்டைவேலி திருத்துவதேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கறுப்பு சூட் அணிந்த மணமகன் தோழரால் தேவாலயத்திற்கு அழைத்துவரப்பட்டார், அதற்குபபின் தூய வெண்ணிற ஆடையும் சோளியும் அணிந்து தூய வெண்ணிற நைலோன் வலையால் முக்காடிடப்பட்டு சாந்தமே உருவாக மணமகள் அழைத்து வரப்பட்டார். தோழிப் பெண்கள் நீலநிற உடையணிந்து நீலமலர்சூடி நின்றனர். போதகர் வண. குணரத்தினம் அவர்களின் ஆராதனையுடன் திருமண வைபவங்கள் நடைபெற்றன. போதகர் மணமக்களை ஆசீர்வதித்துப் பிரசங்கம் செய்தார்.

திருமணவைபவத்தையடுத்து தேவாலய முற்றத்தில் விருந்துபசாரம் நடைபெற்றது.

## வைக்கோலால் வருமானம்

மட்டக்களப்பு, ஞாயிறு

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக்கு சுமார் 60 மைல் சுற்றுவட்டத்திற்குள் இருக்கும் விவசாயிகள்வைக்கோல்மூலம் நல்ல வருமானம் தேடிக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

காகிதத்தொழிற்சாலைஒரு தொன் வைக்கோலைரூபா 50 வீதம் இவர்களிடமிருந்து வாங்க முடிவுசெய்துள்ளது.

## தேவை

வீடுதோறும் சென்று சொக்கலற் வகைகள் விற்பனை செய்வதற்கு பெண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். விவாசம்: கிளைமனேஜர், எட்ணாகோர்ப்பரேஷன், 290, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1836

## விற்பனைக்கு

நீராவியடி பிறவுண் ரோட்டில் நாவலர் வீதிக்கு அண்மையில் மூன்றரைப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு எஸ். சோமசுந்தரம், இல. 9, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். 1824

## கல்வி

ஜி. சி. ஈ. சாதாரணம்/ உயர்தரம், ஜி. ஏ. கியூ., பி ஏ. பரீட்சைகளுக்கு இலங்கையிலேயே மிகத்திறமையான முறையில் அஞ்சல் மூலம் கல்வி அளிக்கப்படுகிறது. 22 இலவசக் கல்வி சலுகைகளும்வழங்கப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரிற்ரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1777

கல்வி நிலையமும், விடுதிச் சாலையும் G. C. E. உயர்தர, சாதாரண வகுப்புக்களுக்கும் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் வகுப்புகளுக்கு முரிய கலை, விஞ்ஞான பாடங்கள் வகுப்பாகவுந் தனித்துங் கற்பிக்கப்படுகின்றன. G. A. G. வகுப்பு 5-2-66 லிருந்து ஆரம்பமாகும். விரும்பிய பாடம் ஒன்றோ, பலவோ கற்க வசதியுண்டு. வேறுபாடசாலையிற் கற்போருக்கு மாலை வகுப்புக்களும் ஏனையோருக்குக் காலை வகுப்புக்களும் நடாத்தப்படும். இருபாலார்க்கும் விடுதி வசதியுண்டு. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1837

பாடசாலை செல்லும் மாணவ, மாணவிகளுக்காக கலை, விஞ்ஞானம், வர்த்தகம் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாலை 4 மணியிலிருந்து 8 மணி வரையும் வகுப்புகள் நடக்கின்றன. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. ஸ்தாபிதம்1924. 1838

## கலண்டர்

'போதினி'க் கலண்டர் கூடியவரை எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுவரும் எமது போதினி மாதக்கலண்டர் இம்முறையும் வழக்கம்போல் அனுப்பப்படும் என்பதை அறியத்தருகின்றோம். 'போயா' தினங்கள், மற்றும் விடுமுறைகள், ஏனைய விபரங்கள் இடுவதிற் சிறிது கால தாமதம் ஏற்பட்டதாலும், மற்றும் சில நெருக்கடிகள் காரணமாகவும் சிறிதுகாலந் தாழ்த்தி—இரண்டு வாரத்துள் வெளிவரவிருக்கிறதென்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்- அதிபர், தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம். 1829

சிகிச்சைக்காக

## துருக்கி ஜனாதிபதி யு. எஸ். செல்வார்

அங்காரா, ஜன. 30

71 வயதான துருக்கி ஜனாதிபதி வருகிற திங்கட்கிழமை வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதியின் பிரதம வைத்தியரும் மற்றும் 9 வைத்திய நிபுணர்களினதும் ஆலோசனைக்கிணங்க அவர் அமெரிக்கா செல்கிறார். துருக்கிய ஜனாதிபதிக்கு முன்பு ஓரளவு பாரிசவாய்வு கண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைநலம் பாராட்டு

மன்னார், திங்கள்

'சாதாரண லிகிதராகஅரசாங்க சேவையிற் சேர்ந்து தனது சுயமுயற்சியினாலும், திறமையினாலும் கச்சேரி உதவியாளர் பதவிவரையில் உயர்வுபெற்று அரிய பணியாற்றிய திரு. சிதம்பரப்பிள்ளை எல்லோருக்கும் முன்மாதிரியான ஒருவராகஇருக்கிறார்.'

மன்னார்க் கச்சேரி உதவியாளராகக் கடமையாற்றி 38 வருட சேவையின்பின் ஓய்வுபெறும் திரு. ஆ. சிதம்பரப்பிள்ளைக்கு மன்னார்க் கச்சேரி ஊழியர்களால் அளிக்கப்பட்ட சேவைநலம் பாராட்டுவிழாவிற்குத் தலைமை வகித்துப்பேசிய தற்காலிக கச்சேரி உதவியாளர் திரு. ரி. டபிள்யு. ஏ. இராசரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்னார்க் கச்சேரிஊழியர்களின் சார்பாக பிரிவுபசாரப்பத்திரம் ஒன்றை திரு. க. கந்தசாமி வாசித்தளித்தார். திருவாளர்கள்சூசைப்பிள்ளை, கிருஷ்ண பிள்ளை, குமாரசாமி, செய்யது, இர


REGAL--JAFFNA
NOW SHOWING
THREE STOOGES IN ORBIT



நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
அன்னை இல்லம்


பொதுச்சந்தை

## நெருக்கடி தீர்ந்தது!

லக்ஸம்பர்க், ஜன. 30

கடந்த இரு தினங்களாக நடைபெற்ற ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளின் கூட்டத்தில் பரஸ்பரம் சுமுகமான நிலையில் நெருக்கடி தீர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த 7 மாதங்களாக பிரான்ஸ் கூட்டத்தை பகிஷ்கரித்து வந்தது.

மகாநாட்டில் ஏற்பட்ட உடன்பாட்டின் விபரம் வெளியிடப்படவில்லை.

## ரொடீஷியா

ஸாலிஸ்பரி, ஜன. 30

ரொடீஷியாவில் பெட்ரோல் கட்டுப்பாடு மேலும் கடுமையாக்கப்பட்டு இருக்கிறது. டாக்டர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்த விநியோகச் சலுகையும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

த்தினசபாபதி, பேக்மன் ஆகியோர் பேசினர்.

நன்றிதெரிவித்துப் பேசிய திரு. சிதம்பரப்பிள்ளை உண்மையான உழைப்பினாலும் திறமையினாலும் குரோதம் கொண்ட மேலதிகாரிகளின் மனதையே மாற்றியமைக்கலாம் என்றும் எல்லோருக்கும் தாம் மிக்க கடமைப்பாடுடையவராக இருப்பதாகவும் தெரிவித்தார்.


ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45 க்கு மட்டும்
ராஜ்கபூர் - பத்மினி
நடித்த
ஜிஸ் டெஸ் மென்
கங்கா பேற்றி ஹாய்
(ஹிந்தி)



இப்பொழுது திரையிடப்படுகிறது

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | நவா (கொம்பனித்தெரு) | விஜயா (மட்டக்களப்பு) |
| மொடேர்ன் (பண்டாரவளை) | மொடேர்ன் (பதுளை) | விஜிதா (அட்டன்) |
| தீவொளி (நாரலை | கல்யாணி (நாவலப்பிட்டி) | சந்தியா (கம்பளை) |



பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜ்ஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.



வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
என். டி. ராமராவ் - மாலதி
நடித்த
பாதாளபைரவி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தா... யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் ... த்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ... ஜனவரி மாதம் 31-ம் திகதி ... வெளி...

## சமசமாஜக்கட்சி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அக்கட்சியில் நம்பிக்கை வைத்தனர். ஆனால் இந்த நாட்டிலே இனவெறியைக் கிளப்பி, தேசிய ஒற்றுமையைக்குலைத்த பண்டார நாயக்காவின் வகுப்புவாத கொள்கைகளுக்கு வாரீசாக பதவியேற்ற ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவைத் தலைவியாகக்கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததனால், சமசமாஜக்கட்சி தனது அழிவுப்பாதையில் முதல் அடியையெடுத்துவைத்தது. கூட்டரசாங்கம் அமைக்கும் யோசனையை ஆதியிலேயே நான் எதிர்த்தேன். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டங்களில் கண்டித்தும், கொழும்பில் நடைபெற்ற கட்சி மகாநாட்டில் அப்பிரேரணைக்கு எதிராகவும் வாக்களித்தேன். ஆயினும் சந்தேகம் காரணமாக அச்சந்தர்ப்பத்தில் கட்சியில் இருந்து விலகுவது புத்தியல்ல என்று கருதினேன். அத்துடன் சிறுபான்மை மக்கள் விடயத்தில் கூட்டரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளப்போகிறது என்பதை பொறுத்திருந்து அவதானிக்கவும் விரும்பியதால் கட்சியில் தொடர்ந்தும் அங்கம் வகித்துவந்தேன். இன, மொழிப்பிரச்னைகளில் சிறப்பான நல்ல முடிவைப்பெற்றுத்தருவோம் என்று கட்சியின் தலைவர்கள் வாக்குறுதி தந்தார்கள். ஆனால், சென்ற வருடம் நடைபெற்ற தேர்தலில் தோல்வியடைந்ததால் ஏற்பட்ட விரக்தி காரணமாக கட்சி நீண்ட காலமாகப் பேணிக்காப்பாற்றி வந்த தனது அடிப்படைக் கொள்கைகளைக்கூட காற்றில் பறக்கவிட்டுவிட்டது. தீவிர வகுப்பு வாதிகள் தானும் கிளப்பத் துணியாத படுவகுப்புவாத கோஷங்களை, 'தோசை' யென்றும், 'மசால வடை'யென்றும் கட்சித் தலைவர்கள் கிளப்பினார்கள். சகல கருமங்களிலும் சிறுபான்மை மக்களைப் புறக்கணித்து நடக்க கட்சியின் தலைமை முற்பட்டது, தமது சமஅந்தஸ்து, மொழிச் சமத்துவ வாக்குறுதிகளுக்கு முற்றிலும் முரணாக, அவற்றிலும் வெகு குறைவான சலுகையாக, தமிழ்மொழி(விசேஷ) மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமயம் விசித்திரமான முறையில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் கட்சி இறங்கியிருக்கிறது. படுபிற்போக்கு வாதிகள் போன்று வகுப்புவாதக் கூச்சல்களை சமசமாஜக் கட்சி கிளப்பக்கூடுமென்று தமிழ்ப்பேசும் மக்கள் கணவில்தானும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே நான் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து விலகிக்கொள்ளுகின்றேன்.

## சுகாதார அமைச்சரின் கிளிநொச்சி விஜயம்

யாழ்ப்பாணம். ஞாயிறு

சுகாதார அமைச்சர் திரு. எம். டபிள்யு. எச். ஜயவர்த்தன அடுத்த மாதம் முதலாம் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்கிறார். இவர் 3-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் கிளிநொச்சித் தொகுதிக்கு விஜயம் செய்வார்.

அமைச்சர் புதிதாக திறக்கப்பட்ட சுகாதாரசேவை அலுவலகத்தையும், கிளி வைத்தியசாலையையும் பிற்பகல் 3 மணியளவில் பார்வையிடுவார்.

இரவு 7 மணிக்கு கிளிநொச்சி மக்கள் சார்பில் அமைச்சருக்கு பொது வரவேற்பு அளிக்கப்படும். கிளிநொச்சி மக்கள் சார்பில் மந்திரிக்கு இராப்போசன விருந்தும் அளித்து கௌரவிக்கப்படும். இங்கிருந்து அமைச்சர் புகையிரதம் மூலம் குருநாகலுக்கு பயணமாவார்.

## "உபஉணவுப் பொருட்களை பயிரிட முன்வருக"

நல்லூர், திங்கள்

''யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் புகையிலைச் செய்கைக்குப் பதிலாக அரசாங்கத்தினால் உத்தரவாத விலைக்கு வழங்கப்படும் உப உணவுப் பொருட்களைப் பயிரிடமுன்வரவேண்டும். இப்பகுதி விவசாயிகள் காலதேச வர்த்தமானத்தையொட்டி தமது விவசாய முறைகளையும் மாற்றி அமைக்கவேண்டும்'' என்று வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை குப்பிளான் கிராம முன்னேற்றச் சங்க ஆண்டு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

குப்பிளான் கிராமமுன்னேற்றச் சங்க ஆண்டுவிழாவிற்கு ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. எஸ். செல்வநாயகம் தலைமை வகித்தார். காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை மேலும் பேசியதாவது:

கிராம முன்னேற்றச் சங்கங்கள் பொருளாதார அபிவிருத்திக்கான திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயல்படுத்த வேண்டும். யாழ்ப்பாண நாட்டைப் பொறுத்த வரையில் உருளைக் கிழங்கு செய்கை மிகவும் பயன் உள்ளது. யாழ்ப்பாண மண்ணில் உருளைக் கிழங்கு பல இடங்களிலும் பயிரிடப்பட்டு விவசாயிகள் நல்ல பலனை அடைந்து வருகிறார்கள்.

கடந்த காலங்களில் உத்தியோகம், வியாபாரம்மூலம் வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட செல்வத்தைவிட கூடுதலான செல்வத்தை பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களிற் காட்டும் அக்கறை மூலம் அடையலாம்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கிராமத்தின் தேவைகளை விரைவில் பூர்த்திசெய்து தருவதாகக் குறிப்பிட்டார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு, சி. செல்வநாயகம். உப தலைவர் திரு ந. கந்தையா, இணைச்செயலாளர்கள் திரு. அ. சங்கரப்பிள்ளை, திரு ஆ. மகாலிங்கம், பொருளாளர் திரு பொ. சிவலிங்கம். எட்டுப்பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## அடுத்த 7 நாட்கள்

- பெப். 1 செவ். —
- பெப். 2 புதன்: தேவமாதாவின் சுத்திகரதிருநாள், கண்ணப்பர் குருபூஜை.
- பெப். 3 வியா.——
- பெப். 4 வெள்ளி: இலங்கை சுதந்திர தினம், வீரமாமுனிவர் மறைவு தினம், அரசாங்க,வங்கி வர்த்தக விடுமுறை, போயா தினம்.
- பெப். 5 சனி பூரணைவிரதம்.
- பெப். 6 ஞாயிறு: மோதிலால் நேரு மறைவு தினம்.
- பெப். 7 திங்கள் ——

## திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி விழா

திருக்கேதீச்சரம், ஞாயிறு

அடுத்த மாதம் 18-ம் திகதி திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி விழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவிருக்கின்றது. அன்று பகல் கேதீச்சரநாதருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும் பின் இரவு தேவாரபாராயணம சமயப் பிரசங்கம், இன்னிசைக்கச்சேரிகள், புராணபடனம் இன்னும் பல விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. அடுத்தநாள் காலை 8 மணியளவில் கௌரி அம்பாள் சமேதராய் கேதீஸ்வர நாதர் தீர்த்தமாடப் பாலாவி தீர்த்தக்கரைக்கு எழுந்தருளுவார். மேற்படி தினங்களில் மகேசுவர பூசையும் இடம்பெறும்.

சிவராத்திரி விழாவை முன்னிட்டு திருக்கேதீச்சரத்திற்கு விசேஷ பஸ் சேவை நடைபெறுவதற்கு திருப்பணிச்சபையார் ஒழுங்கு செய்துள்ளதாகஅறிவித்துள்ளார்கள். மேற்படி பஸ் சேவைகள் வவனியா, மன்னார், திருக்கேதீச்சரம் ஆகிய புகையிரத நிலையத்திலிருந்து புகையிரத இணைப்புச் சேவையாகவுமிருக்கும். யாழ்ப்பாணத்திலிருந்தும் அநுராதபுரத்திலிருந்தும் நேரடிப் பஸ்சேவை நடைபெறும்.

## இரத்தப்போக்கினால் மரணம்

மாவிட்டபுரம், ஞாயிறு

சுன்னாகம் தபாக்கந்தோரைச் சேர்ந்த திரு. எஸ். சர்வானந்தா (35 வயது) மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று காலமானார். நாசியாலும் வாயினாலும் இரத்தப்போக்குஏற்பட்டதைத்தொடர்ந்து ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.


தேவை

5-ம் வகுப்பு சித்தி அடைந்த 25 — 40க்குள் பட்டவர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் மின்சார வேலைப்பகுதிக்கு தேவை. முழு விபரங்களுக்கு ரூபா 1/50 போஸ்டல் ஓடர் அனுப்புக. நயற்றுபிளி கேற்சற், கீரிமலை வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1841

வாடகைக்கு அல்லது குத்தகைக்கு

இடவசதியுள்ள புதிய வீடு உடனடியாக கொடுக்கப்படும். யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி சமீபம். ''வசந்த மஹால்'', 50, ஸ்ரீவேங்கடேசன்வீதி. 1842



திருமண விருந்துபசார அழைப்பு

ஆலாலசுந்தரம் — யோகேஸ்வரி

அண்மையில் நடந்தேறிய எமது திருமணத்தை முன்னிட்டு 2-2-66 புதன்கிழமை மாலை 5-30 மணியளவில் 388/4 நல்லூர் வடக்கு மணமகளில்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசார வைபவத்திற்குத் தவறு... சமூகம் தரும்வண்ணம் பெரியோர்கள், நண்பர்... உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்... றோம்.

தனிப்பட்ட அழைப்பில்லை

திரு. திருமதி மு. ஆலாலசு...
(அட்வக்...

நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org